செ.வெ.எண்.70 நாள்: 21.06.2021

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் வருவாய் தீர்வாய கணக்கு முடிப்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 1430ம் பசலி ஆண்டு பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு முடிப்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.06.2021) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இன்று உடன்குடி உள்வட்டத்தை சேர்ந்த செம்மறிக்குளம், குதிரைமொழி, பரமன்குறிச்சி, நங்கைமொழி, மெஞ்ஞானபுரம், மானாடுதண்டுபத்து, லட்சுமிபுரம் ஆகிய கிராமங்களை சேர்ந்த பொதுமக்களிடம் ஆன்லைன் மூலம் பெறப்பட்ட 62 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார். மேலும் கிராம கணக்கு பதிவேடுகளையும், நில அளவை கருவிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனைத்தொடர்ந்து ஆன்லைன் மூலம் பெறப்பட்ட மனுக்களில் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 3 முதியோர்களுக்கு முதியோர் உதவித்தொகைக்கான உத்தரவினையும், 5 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டாக்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து திருச்செந்தூர் பகுதியில் உள்ள ஆதவா அறக்கட்டளையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அரிசி மற்றும் பலசரக்கு பொருட்களை திருச்செந்தூர் பகுதியில் உள்ள 100 இசைக்கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் இன்றைய தினம் அனைத்து தாலுகாவிலும் ஜமாபந்தி என்று சொல்லக்கூடிய வருடாந்திர வருவாய் தீர்வாயம் தொடங்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் மொத்தம் 10 தாலுகா உள்ளது. ஒவ்வொரு தாலுகாவிலும் மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் துணை ஆட்சியர்கள் ஒவ்வொரு தாலுகாவுக்கும் அனுப்பி உள்ளோம். கொரோனா நோய் தொற்றின் காரணமாக பொதுமக்கள் நேரடியாக வர இயலாத காரணத்தினால் ஆன்லைன் மூலம் மனுக்கள் பெறப்பட்டு வருகிறது. திருச்செந்தூர் தாலுகாவிற்கு இன்றைய தினம் வரை 62 மனுக்கள் வரப்பெற்றுள்ளது. வருவாய் தீர்வாயத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம வாரியாக ஜமாபந்தி 2 வாரம் நடைபெறும். ஒரு நாளைக்கு 6 முதல் 7 கிராமம் வரை அன்றைய தினம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் பிர்காவுடைய சர்வேயர் கிராமத்தின்

பல்வேறு பதிவேடுகளை பசலி ஆண்டில் எவ்வளவு பட்டா மாறுதல்கள் நடைபெற்றுள்ளது. சப் டிவிசன் செய்யப்பட்ட பட்டாக்கள், பயிர் சாகுபடி ஆகியவற்றினை சரிபார்ப்போம். பட்டா மாறுதல்கள் செய்யப்பட்டிருந்தால் பட்டா மாறுதலின் போது பெயர் மாற்றம் சரியாக செய்யப்பட்டுள்ளதா சரியாக செய்யப்பட்டிருந்தால்தான் அந்த நபரின் பெயருக்கு பட்டா கிடைக்கும். மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகை பெற்றவர்களின் விவரம், சர்வேக்கள் சரியாக உள்ளதா என தரவு செய்யப்படும். நமது மாவட்டத்தில் குறிப்பிட்ட கிராமத்தில் வருவாய் சம்பந்தமான கணக்குகள் சரியாக உள்ளதா, அனைத்துபணிகள் சரியாக நடந்துகொண்டிருக்கிறதா என ஆய்வு செய்யப்படும். அதுமட்டுமல்லாமல் ஜமாபந்தியில் பொதுமக்கள் மனு அளிக்கலாம். பட்டா மாற்றம், வீட்டுமனைப்பட்டா என பல்வேறு நிலுவையில் உள்ள மனுக்களை கண்டறிந்து உடனுக்குடன் தீர்வு காணப்படும். இன்றைய தினம் மட்டும் ஜமாபந்தியில் வந்த மனுக்களில் 5 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உங்கள் தொகுதியில் முதல்வர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஆன்லைனில் உள்ள மனுக்கள் மீதான நடவடிக்கை எடுக்கப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வருகிறோம். எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இன்றைய தினம் தீர்வு காணப்பட்டுள்ளது. கொரோனா நோய் தொற்று காலத்தில் பல்வேறு தரப்பு மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களின் பாதிப்புகளை சரிசெய்வதற்காக ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் ரூ.4000 மற்றும் 15 வகையான மளிகை பொருட்கள் இலவசமாக வழங்கியுள்ளோம். அதுமட்டுமல்லாமல் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து உதவிகள் செய்துகொண்டு இருக்கிறோம். அந்த வகையில் இன்றைய தினம் ஆதவா டிரஸ்ட் மூலம் மளிகைப்பொருட்கள் கொடுத்திருக்கிறோம். இதுபோல மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு, நலிந்த கலைஞர்களுக்கு மளிகை பொருட்கள் மற்றும் தேவையான உதவிகள் செய்து வருகிறோம் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (பொது) திரு.இளங்கோ, திருச்செந்தூர் வட்டாட்சியர் திரு.முருகேசன், சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் திரு.ராமச்சந்திரன் மற்றும் துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.